# சாளரம்

# Chāḷaram

புரட்டாதி – மார்கழி ஒளி-08 Sept - Dec 2015 கீற்று- 03

இது ஒரு எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் தயாரிப்பு.

© Essex Tamil Society 2015

கடந்த மாதம் 17ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற தேர்தல் முடிவுகளின் படி தமிழர் தாயகப் பகுதியில் அதிகூடிய பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்று தமிழ்க் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது.

இன்னுமொரு முறை யுத்தம் முடிவுக்கு வந்து ஆறு வருடங்களாகின்ற இந்நிலையில் வடக்கு, கிழக்கு மக்களுக்கான அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதில் இம்மியளவு நகர்வைக் கூடக் காண முடியவில்லையென்பதால் தமிழ்க் கூட்டமைப்பை நோக்கியே ஏனைய அரசியல் தரப்புகள் சுட்டுவிரல் நீட்டி வந்தன. தமிழ்க் கூட்டமைப்பு இனிமேல் எவ்வாறு தனது அரசியலை முன்னெடுக்கப் போகிறது? இதுவே மக்களின் எதிர்பார்ப்பு. மூன்று தசாப்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ச் சமூகத்தின் குறைகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன. அரசியல் உரிமைகள் என்பதற்கப்பால் ஏனைய அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுவது அவசியமாகிறது. தமிழ்க் கூட்டமைப்பு ஆளுமை நிறைந்ததாக தன்னை மாற்றிக் கொண்டு புதிய பாதையில் பயணிக்க வேண்டும். அதுவே எமது விருப்பமும் ஆகும்.

எமது தமிழ்ப் பாடசாலையின் இவ்வாண்டுக் கலைவிழாவுடன் கூடிய பரிசளிப்பு வைபவமும், இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியும் மிகவும் கோலாகலமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்று முடிந்துள்ளன. அதற்கெல்லாம் முக்கிய காரணமாக விளங்கும் எமது தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களும், பெற்றோர்களாகிய உங்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றிகளையும் எமது கழக உறுப்பினர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எமது தமிழ்ப் பாடசாலைக்கு அருகில் இருந்து எல்லோருக்கும் நல்லருள் பாலித்துவரும் இலண்டன் செல்வவிநாயகர் ஆலய, இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத் திருவிழாக்கள் இவ்வாண்டு மிகவும் சிறப்பாக நடந்தேறி முடிந்துள்ளன. எமது தமிழ்ப் பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகள் செல்வ விநாயகர் ஆலய ஏழாம் திருவிழாவின்போது நடைபெற்றது. அத்துடன் ஆண்டு தோறும் தேர்த்திருவிழாவின்போது எமது தமிழ்க் கழகத்தால் நடாத்தப்படும் தண்ணீர்ப்பந்தலிலும் எமது தமிழ்ப்பாடசாலை மாணவ மாணவியர்கள் பங்குபற்றிச் சிறப்பித்திருந்தார்கள். வழமைபோல இவ்வாண்டும் எமது கழகத்தின் தண்ணீர்ப்பந்தல் இனிதே இடம்பெற முழு ஒத்தழைப்பு வழங்கிய திரு திருமதி ரமேஷ் குடும்பத்தினருக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். அந்நிகழ்ச்சியின் படங்கள் உள்ளே இடம்பெற்றுள்ளன.

இவ்வாண்டு அனைத்துலகத் தமிழ்த் தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. தேர்வில் தோற்றிய மாணவர்களில் 99% மாணவர்கள் சித்தியடைந்து எமது தமிழ்ப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அதே வேளை G.G.S.E Cambridge தமிழ்ப் பரீட்சையில் எமது பாடசாலையில் இருந்து தோற்றிய மாணவர்களும்; A*, A தரத்தில் சித்திடைந்துள்ளமை மிகவும் மகிழ்ச்சிதரக்கூடியதாயுள்ளது. அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

**இந்தத் தவணைக்கான நிகழ்ச்சி நிரல், வகுப்புகளின் ஆசிரியர்களின் பெயர்களையும் உள்ளே காணலாம்.**


QUALITY! VARIETY!! SATISFACTION!!!
ALL YOUR FAVOURITES UNDER ONE ROOF
Asian, Oriental & Afro-Caribbean food Speciality
Veena's
CASH & CARRY
Veena's
Fruits & Vegetables
Pooja Items
Lentils, Pulses, Dry fruits & Nuts
Rice, Flour, Masalas & Spices
Beauty, Cosmetics & Hair Care Items
Frozen food & Processed food
Frozen Fish, Prawn & Crab
Ready to Eat, Snacks and Pickles
HouseHold & Kitchenware
Halal Meat
International Money Transfer (BFC)
5000 sq. feet of sales area
Call For Wholesale Order
+44 20 8550 2700
"FRESH VEGETABLES & GROCERIES FROM AROUND THE WORLD"
Now Online Shopping
@VEENAS.COM
Do your shopping any where! any time!
VEENAS CASH & CARRY 77-79 High Street, Barkingside, Illford IG6 2AF, UK
Call : +44 20 8550 2700 Website: www.veenas.com

## இந்தத் தவணைக்கான பாடசாலை நாட்கள்

| | |
|---|---|
| **04.09.2015** | **தவணைக்கான பாடசாலை ஆரம்ப நாள்** |
| 11.09.2015 | வெள்ளிக்கிழமை |
| 18.09.2015 | வெள்ளிக்கிழமை |
| **25.09.2015** | **வெள்ளிக்கிழமை மாதாந்தப் பரீட்சை** |
| 02.10.2014 | வெள்ளிக்கிழமை |
| 09.10.2015 | வெள்ளிக்கிழமை |
| **16.10.2015** | **வாணி விழா** |
| **23.10.2015** | **வெள்ளிக்கிழமை மாதாந்தப் பரீட்சை** |
| **30.10.2015** | **பாடசாலை இடைத்தவணை விடுமுறை** |
| 06.11.2015 | வெள்ளிக்கிழமை |
| 08.11.2015 | விவேகானந்த சபை சைவசமய பரீட்சை |
| 13.11.2015 | வெள்ளிக்கிழமை |
| 20.11.2015 | வெள்ளிக்கிழமை |
| **27.11.2015** | **மாவீரர் நாள்** |
| 04.11.2015 | வெள்ளிக்கிழமை |
| 11.11.2015 | வெள்ளிக்கிழமை |
| **18.11.2015** | **தவணைக்கான பாடசாலை இறுதி நாள் + நத்தார் விழா** |

## வகுப்புகளின் ஆசிரியர்கள்

**வளர்நிலை 1**
திருமதி சந்திரமோகன்
திருமதி சுந்தரலிங்கம்
திருமதி நரேந்திரன்

**வளர்நிலை 2**
திருமதி ஸ்ரீகாந்தன்
திருமதி பாஸ்கரன்

**வளர்நிலை 3**
திருமதி பிறேம்ராஜ்

**வளர்நிலை 4**
திருமதி காண்டீபன்

**வளர்நிலை 5**
திருமதி இரகுரஞ்சன்

**வளர்நிலை 6**
திருமதி தயாபரன்

**வளர்நிலை 7**
திருமதி குலேந்திரன்

**வளர்நிலை 8**
திரு ஜெயகுமார்

**வளர்நிலை 9**
திருமதி செல்வேந்திரமூர்த்தி

**வளர்நிலை 10**
திருமதி செல்வேந்திரமூர்த்தி

**வளர்நிலை 11**
திருமதி செல்வேந்திரமூர்த்தி

**Cambridge International Exams :-**
**O Level (GCE), AS Level and A Level**
திருமதி ஜெயகுமார்


© Essex Tamil Society 2015



The London Sri Murugan Temple, Eastham Chariot Festival took place from the 1st of August to the 15th August. This festival's main purpose is to unite the whole of the Hindu community and each day the main deity of the temple will circulate the temple (usually interior; sometimes also exterior) on a different mount. As you can see below, the picture denotes the main deity of the London Sri Murugan Temple, Murugan, circulating on the elephant mount. On the right, you can view the grand climax of the festival : the Chariot Festival where the deity circulates the whole town on a chariot.

இலண்டன் ஸ்ரீ முருகன் கோயிலின் திருவிழா இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து பதினைந்தாம் திகதி வரை சிறப்பாக நடைபெற்றது. திருவிழாவின் ஓர் குறிக்கோள் ஒரு ஊரின் இந்துக்களை ஒன்று சேர்ப்பதாகும். ஒவ்வொரு நாளும் அந்தக் கோயிலின் மூலவராகிய முருகப்பெருமான் வேறுவேறு வாகனங்களில் கோயிலைச் சுற்றி வருவார். கிழக்கில் உள்ள படத்தில் முருகப்பெருமான் யானை வாகனத்தில் வலம்வருகிறார். மேலே உள்ள படத்தில் முருகப்பெருமான் தேரில் ஏறி வலம் வரும் காட்சி இடம்பெற்றுள்ளது.






Our Tamil School also held a drinks stall on Thorold Road, where we provided all the people who had come to watch the chariot festival drinks and mini-snacks to keep them refreshed.

எமது தமிழ் பாடசாலையினால் நடாத்தப்படும் தண்ணீர் பந்தல் இவ்வாண்டும் செல்வ விநாயகர் தேர்த்திருவிழாவின்போது எமது மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் நடைபெற்றது.



© Essex Tamil Society 2015










மாலையில் விளையாட்டுப் போட்டி பரிசில்களை வழங்க வருகைத் தந்த Redbridge Council எமதினத்தைச் சேர்ந்த Deputy Mayor திரு திருமதி ஜெயரஞ்சன் அவர்கள் வருகைத் தந்து எமக்கெல்லாம் பெருமை சேர்த்தார்கள். இவ்வாண்டு விளையாட்டுப் போட்டியின் அணி வகுப்பு மரியாதையில் வெற்றி பெற்ற இல்லம் பச்சை இல்லமாகும்.









இவ்வாண்டு விளையாட்டுப் போட்டியை திரு திருமதி தனபாலசிங்கம் அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அடுத்த படத்தில் இவ்வாண்டு விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மஞ்சல் இல்ல ஆசிரியைகள் உதவி மேயரிடமிருந்து பரிசிலை பெற்றுக் கொள்வதையும் காண்கிறீர்கள்.

# ESSEX TAMIL SOCIETY
## KALAI VIḶA AND AWARDS CEREMONY 2015
## STATEMENT OF
## INCOME AND EXPENDITURE

| | | |
|---|---|---|
| **INCOME** | £ | |
| DONATION FROM **MR AND MRS RAMATHAS** | | 300.00 |
| FOOD SALES | | 1400.00 |
| DONATION - FOOD | | 200.00 |
| **TOTAL INCOME** | | 1900.00 |
| **EXPENSES** | | |
| HALL HIRE DEPOSIT | | 200.00 |
| HALL HIRE | | 450.00 |
| PHOTOGRAPHY AND VIDEOGRAPHY | | 300.00 |
| MEDALS | | 300.00 |
| SPECIAL AWARD | | 50.00 |
| FLOWER BOUQUETS AND GARLANDS | | 225.00 |
| FOOD PURCHASES | | 978.00 |
| **TOTAL EXPENSES** | | 2503.00 |
| **EXPENSES OVER INCOME** | | (603.00) |

## SPORTS DAY 2015
## STATEMENT OF
## INCOME AND EXPENDITURE

| **INCOME** | £ | £ |
|---|---|---|
| GAME FEES | | 700.00 |
| DONATIONS FROM **MR AND MRS THILEEPAN** | 100.00 | |
| FOOD SALES | 931.00 | 1031.00 |
| **TOTAL INCOME** | | 1731.00 |
| **EXPENSES** | | |
| GROUND HIRE | 243.00 | |
| FOOD PURCHASES | 752.72 | |
| SAND BAGS | 16.40 | |
| GOLD, SILVER, BRONZE MEDALS | 240.00 | |
| **TOTAL EXPENSES** | | 1252.12 |
| **INCOME OVER EXPENSES** | | **478.88** |

**The new Management Committee has decided that we should publicise all the incomes and expenses (accounts) taken for all the school events from this issue. Annual accounts will also be publicised from the next issue. We express our sincere gratitude to Mr and Mrs Ramathas from Goshin Isshinryu Karate for their helpful donations during the Kalai Viḷa and Mr and Mrs Thileepan from Thigan Motors for their monetary aid during the Sport Day.**

© Essex Tamil Society 2015

# விநாயகர் சதுர்த்தி

இம்மாதம் 17ஆம் திகதி ஆவணிச் சதுர்த்தி வருவதை முன்னிட்டு இச்சிறு கட்டுரை எமது சாளரத்தை அலங்கரிக்கின்றது.

விநாயகர் வழிபாடு இந்து சமயத்துக்குத் தொன்மையானது. பிள்ளையார் வழிபாடு இன்றி எந்த ஒரு வழிபாடோ,யாகமோ எதுவும் தொடங்குவதில்லை. விநாயகர் எல்லா வினைகளையும் இடர்களையும் அகற்றுபவர். ஆதலால் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும், முதலில் அவரை வணங்கிய பின்னர்தான் நாம் அந்தக் காரியங்களைச் செய்கிறோம்.

இந்து சமயத்தின் ஆறுவகை வழிபாட்டுப் பிரிவுகளில் கணாபத்யம், கௌமாரம், சைவம், வைணவம், சாக்தம், சௌரம் ஆகிய அனைத்திலும் விநாயகரை வணங்கிய பின்னரே தங்கள் தெய்வ வழிபாட்டைத் தொடங்குவர். இங்கே மேலே கூறப்பட்ட ஆறு வகைப் பிரிவுகளில் வணங்கப்படும் தெய்வங்கள்.

| பிரிவு | கடவுள் |
|---|---|
| கணாபத்யம் | கணபதி |
| கௌமாரம் | முருகன் |
| சைவம் | சிவன் |
| வைணவம் | விஷ்ணு |
| சாக்தம் | சக்தி |
| சௌரம் | சூரியன் |



**இதில் கணாபத்யர் ஸ்ரீகணபதியை மட்டுமே வணங்குவர்.**

விநாயக அவதாரம் குறித்து புராணங்கள் பலவிதமான நம்பமுடியாத கதைகளைக் கட்டிவிட்டாலும் உண்மையான கதையாக இருப்பது இதுவே.

ஒருமுறை சிவபெருமானும், உமாதேவியும் கயிலை மலையிலுள்ள வசந்த மண்டபத்தில் இருக்கும் ஓவியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவற்றில் பிரணவத்தின் ஓவியமும் இருந்தது. அளவிடற்கரிய பெருமை வாய்ந்த பிரணவத்தை, உலகமக்கள் யாவரும் புறக்கண்ணாலும் தரிசித்து வழிபடுவதற்கு ஏற்ற வகையில், ஒரு தெய்வப் பிறப்பைத் தோற்றுவிக்க வேண்டும் என இருவரும் மனதுக்குள் எண்ணினர். சிவபெருமான் களிறு (ஆண்யானை)வடிவத்தையும் உமாதேவியார் பிடி(பெண்யானை) வடிவத்தையும் அடைந்து பிரணவ விநாயகரைத் தோற்றுவித்தனர். உலகில் துக்கமும்,நோயும் பிடியாதிருக்கும் பொருட்டு கணபதியை அருளினாராம் சிவன். ஸ்ரீவிநாயகரின் அவதாரச் சிறப்பை மிக அற்புதமாகப் போற்றுகிறார் திருஞானசம்பந்தர் தன் தேவாரமூலமாகப் பின்வருமாறு:-

**பிடியதன் உருஉமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்**
**கடி கண பதிவர அருளினன் மிகு கொடை**
**வடிவினர்பயில்வலி வலம் உறை இறையே** பாடுகின்றார்.

தனது திருவடியை வழிபடும் அன்பர்களின் இடர்களைக் களைந்து இன்பம் அளிப்பதற்கு வந்தவர்கணபதி. எழுத்துகளுக்கெல்லாம் அகரம் மூலமும் முதலும் ஆவது போல உலகுக்கெல்லாம் மூலமும் முதலும் ஆகிய இறைவன் விநாயகரை, ஓம் என்ற பிரணவ சொரூபியை, அவணிச் சதுர்த்தி நன்னாளில் நாமும் உலக நன்மைக்காக வழிபடுவோம்.

© Essex Tamil Society 2015

## பொருளியலைச் சார்ந்திராமல்,அருளியலுக்கு முக்கியத்துவம் தருபவர்களுக்கு...

கடவுளின் இருப்பைக் குறித்த சந்தேகம் எழுவதில்லை ஒரு பொருளை அறிய வேண்டுமெனில் முதலில் அதன் இலக்கணத்தை அறியவேண்டும். வேதப்பொருளாக விளங்கும் திருக்குறளில் பரமபொருளின் இலக்கணத்தை எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர்.

ஒரு விடயத்தை அழுத்திச் சொல்ல, ஒருமுறைக்குப் பத்து முறை கூறு என்கிறோம். திருவள்ளுவரும் திருக்குறளில் ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறட்பாக்கள் மூலம் ஒரேவிடயத்தை பலவாறாகக் கூறியுள்ளார். அதேபோல கடவுள் வாழ்த்துப் பகுதியில் பத்துக் குறட்பாவிலிருந்தும் கடவுளைப் பற்றிய இலக்கணம், கடவுளை வழிபடும் முறை, அதனால் ஏற்படும் பயன் ஆகிய மூன்று அம்சங்களை அறிய முடிகிறது. கடவுளைப் பற்றி திருவள்ளுவர் கூறும் இலக்கணங்களைக் கவனித்தால் உலக முதல்வன், எல்லாம் அறிந்தவன் (வாலறிவன்), உள்ளத்தாமரையில் உணர்வாக இருப்பவன்(மலர்மிசை ஏகினான்), விருப்பு- வெறுப்பு அற்றவன் (வேண்டுதல் வேண்டாமை இலான்), எங்கும் நிறைந்திருப்பவன்(இறைவன்), ஆசையற்றவன் (பொறிவாயில் ஐந்தவித்தான்), தனக்குவமை இலாதான், அறக்கடலாக விளங்குபவன்(அறவாழி அந்தணன்), எண்குணத்தான். இந்தத் திருக்குறளில் சொல்லப்பட்டுள்ள கடவுள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்? என்பது தெரியாது. ஏனெனில் சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவர் கடவுள். சமயச் சின்னங்களுக்குள் அவரை அடக்கிவிட முடியாது. பெயரும், வடிவமும் கடந்தது பரம்பொருள். அதனால்தான் ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற் காயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ என்று பாடினார் மாணிக்கவாசகர்.

ஆத்திசூடி இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்
கருநிறங்கொண்டு பாற்கடல் மிசைகிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர் துணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே
தெனியல் ஒளியுறு அறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினர்

அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவம்: என்ற மகாகவி பாரதியாரின் இந்தப் பாடல் கூறும் அறிவே உருவான ஆண்டவர் எந்த மதத்ததைச் சேர்ந்தவர்? எந்த மதத்தையும் சாராதவர் என்றால் ஏன் இந்தக் கடவுள் வாழ்த்து பாடசாலையில் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுவதில்லை? ஒருவேளை இறைவன் என்ற ஒருவர் இருந்து அவரை வழிபடாவிட்டால் கண்ணைக் குத்திவிடுவாரோ? என்ற பயத்தில் பலர் வழிபடுகின்றனர். இன்னும் சிலர் கடவுளுக்கு லஞ்சம் கொடுக்க எத்தனிக்கிறார்கள். இன்னும் சிலரோ குறுக்கு வழியில் இறைவன் அருள் பெறத்துடிக்கின்றனர். ஆலயங்களில் எதற்கும் முன்னே நிற்பது மட்டுமன்றி அங்கேயெல்லாம் தமது ஆதிக்கங்களைச் செலுத்திவிட்டால் கடவுள் அருள் தமக்கு முதலில் கிடைக்கும் என்ற மூடநம்பிக்கை கொண்டுள்ளனர். இத்தகையவர்கள் வேண்டிக்கொண்ட பத்துக் காரியங்களில் ஐந்து நடந்து ஐந்து நடக்காவிட்டால் கடவுள் இருக்கிறாரா என்ற சந்தேகம் நாத்திகளைப்போல ஆத்திகனுக்கும் வந்துவிடுகின்றது. எனவே பொருளியலைச் சார்ந்திராமல் அருளியலுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் கடவுளின் இருப்பைக் குறித்த சந்தேகம் எழாது.

---

### பாடசாலை அறிவித்தல்கள்

- **எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சைவசமயப் பரீஷ்சை நடைபெற உள்ளது. வளர்நிலை 2 முதல் 12 வரை உள்ள இந்து சமய மாணவர்கள் அனைவரும் சைவசமயப் பரீட்சைக்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து £15.00களை விண்ணப்பத்துடன் 25.09.2015 முன் சமர்ப்பிக்கவும்.**
- எதிர்வரும் ஒக்டோபர் மாத இடைத்தவணை வாரத்தில் காலை 10:00 – 13:00 (Monday – Friday) சைவ சமய மீட்டல் வகுப்புக்களும் நிகழும் என்பதை பெற்றோர்கள் கவனத்தில் கொள்ளவும்.
- அரசாங்க பாடசாலையில் Year 10, 11, 12, 13 கற்கும் மாணவர்கள் GCSE (May 2016) , AS Level, A Level - Tamil November 2015 நடைபெற இருப்பதால் அதற்கான பிரத்தியேக தமிழ் வகுப்புகள் சனிக்கிழமைகளில் நடைபெறுகின்றன. பரீட்சைகள் அவர்கள் கற்கும் அரச பாடசாலையில் தோற்றுவதற்கு ஏற்பாடு செய்து தரப்படும். தயவு செய்து UCAS புள்ளிகளை அதிகப்படுத்த Cambridge University பரீட்சைகளில் பங்குகொள்வது மாணவர் கையிலும் முன்வந்து பயனைப் பெற உற்சாகம் கொடுப்பது பெற்றோர்கள் கையிலும் தான் உள்ளது.
- கடந்த 8 வருட காலங்களில் எசெக்ஸ் தமிழ்க் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் A*, A தகமைகளில் சித்தியடைந்து வந்துள்ளார்கள். இம்முறையும் எமது மாணவர்கள் பாடசாலையிற்கு பெருமை சேர்த்துள்ளார்கள் என்பதை பெருமையுடன் தெரியப்படுத்துகின்றோம்.